18 மைல்கள்தான் உள்ளது. அதற்கு இருப்புப்பாதை போடச் சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மன்னார்குடி—திருத்துறைப் பூண்டி பாதை சர்வே செய்யப்பட வேண்டுமென்றுதான் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அது சர்வே செய்யப்பட்ட பிறகு மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு இணைப்புப் பாதை போட ஏற்பாடு செய்யலாம்.

திரு. ஆர். நாகசுந்தரம் : மத்திய சர்க்காரில் உள்ள ரெயில்வே அமைச்சகம் மாநில அரசின் சிபார்சு மீதுதான் புதுப் பாதைகளை அமைக்குமா? இந்தச் சர்க்காரில் உள்ள ரெயில்வே மந்திரி யார்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இங்கு ரெயில்வே மந்திரி இல்லை—போக்குவரத்து மந்திரிதான்.

மதுரை மாவட்டத்தில் பழரச ஆராய்ச்சிப் பண்ணை

* 38 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் பழரச ஆராய்ச்சிப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால் எந்த இடத்தில்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை, ஐயா.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Is there any other Fruit Research Farm in any place in the Madras State?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழகத்தில் மூன்று இடங்களில் பழ ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. அவை (1) திம்மாவரம், (2) பெரியகுளம், (3) கூனூர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை மாவட்டத்தில் பழத்தைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதுபற்றித் தனிக் கேள்வி கேட்கவும்.

கோழி அபிவிருத்தித் திட்டம்

* 39 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோழி அபிவிருத்தித் திட்டத்தை எடுத்துவிடும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லை, ஐயா.